1979 அக்டோபர் 29]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, தனிக் கேள்வி போட்டு, விவரத்தைப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

திரு. துரை முத்துசாமி : பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் 100 இடங்கள் காலியாக இருப்பதாகச் சொன்னார்கள். எத்தனை ஆண்டு காலமாக காலியாக இருக்கின்றன ? 100 காலி இடங்களுக்கு நிதிநிலைமை சரியாக இல்லையென்று சொன்னார்கள். முன்பு இருக்கின்ற நிதி நிலைமையைப் பொறுத்துத்தான் அவை நிரப்பப்பட்டிருந்தன. அந்த 100 இடங்களும் நிரப்பப்படாமல் இருந்ததற்குக் காரணம் என்ன? தகுதி உடையவர்கள் இல்லையா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : சிக்கனம் கருதியும் தேவை இல்லாமல் இருப்பதாலும், அந்த இடங்கள் காலியாக இருக்கின்றன. தேவை ஏற்படும்போது நிரப்பப்படுகின்றன.

டாக்டர் கே. சமரசம் : பேரவைத் தலைவரவர்களே, சென்னை மாநகராட்சியிலே உள்ள அந்தப் பதவிகள் அத்தியாவசிய வேலைகள் காரணமாகக் கொடுக்கப்பட்டதா? அல்லது சிலருக்கு வேலை கொடுக்க வேண்டுமென்பதற்காகக் கொடுக்கப்பட்ட பதவிகளா ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, அப்பொழுது தேவை ஏற்பட்டது. அந்தப் பணிகள் கொடுக்கப்பட்டன. இப்பொழுது தேவையில்லை, ஆகவே, பணி கொடுக்கப்படவில்லை.

செந்தாரப்பட்டி பஞ்சாயத்திலுள்ள புறம்போக்கு நிலங்கள்.

*வினா எண் 31—திரு. செ. மெ. ராஜு: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) சேலம் மாவட்டம், செந்தாரப்பட்டி ஊரிலுள்ள பஞ்சாயத்து புறம்போக்கு நிலங்களை அவ்வூராட்சி மன்றத் தீர்மானம் இல்லாமலேயே அடமானம் செய்து கொடுத்திருப்பதை அரசு அறியுமா—

(ஆ) ஆம் எனில் அப்படி தீர்மானம் இல்லாமல் பட்டா வழங்கப்பட்ட நிலங்களின் விஸ்தீரணம் எத்தனை ஏக்கர் ?

(இ) தவறுதலாக பட்டா வழங்கப்பட்டிருந்தால் அந்த அதிகாரி மீது என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது ?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து :

(அ) இல்லை.

(ஆ) இக் கேள்விக்கு இடமில்லை.

(இ) குறிப்பிட்ட புகார் ஏதும் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டால் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. செ. மெ. ராஜூ : தலைவரவர்களே, இதுபோன்ற ஆயிரக்கணக்கான ஏக்கர்கள் பஞ்சாயத்தினுடைய தீர்மானம் இல்லாமல் கொடுக்கப்பட்டு வருகிறது. அதைக் கண்டுபிடித்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா என அறியவிரும்பு கிறேன்.

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து : தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் இதுபோன்று என்று சொல்கிறார். அவர் குறிப்பிட்டிருக்கிற அந்தப் புகாரேகூட அரசுக்கு வரவில்லை.

நெய்வேலியில் கிடைக்கும் தண்ணீரில் ரசாயனக் கலவை.

*வினா எண் 32—திரு. சி. கோவிந்தராசன் : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா —

(அ) நெய்வேலி நகரத்தில் கிடைக்கும் தண்ணீரில் சிலிக்கா (Slica) என்னும் ரசாயன வஸ்து இருப்பதால் அந்தத் தண்ணீரை குடிப்பவர்களுக்கு வயிற்று வலி நோய் வருவது உண்மையா ?

(ஆ) அதை அகற்றி தண்ணீரை சுத்தப்படுத்துவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதா ?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் :

(அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

திரு. சி. கோவிந்தராசன் : பேரவைத் தலைவரவர்களே, நெய்வேலியில் கிடைக்கக்கூடிய தண்ணீரில் சிலிக்கா என்ற இரசாயனப் பொருள் இருப்பதனால் வயிற்று வலி தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறது என்பது அனுபவிக்கப்பட்டு அந்தத் தண்ணீர் பரிசோதனைக்கு கிண்டிக்கு அனுப்பப்பட்டு, 'அந்த சிலிக்கா இருக்கிறது என்பது உண்மைதான், ஆனால் அதனால் வயிற்று வலி வரவில்லை', என்று அவர்களிடமிருந்து அறிக்கை